முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

S C.No. 66/2020

அரசு தரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | வயது | : | |
| தந்தை/ கணவர் பெயர் | : | தங்கவேல் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)—ன் விதிமுறைகளின்படி 25.09.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை—**

நான் தற்போது கீழ் புவனகிரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். என் ஊருக்கு பக்கத்து ஊர்காரர். நான் செங்கல் சூலையில் கூலி வேலை செய்து வருகிறேன். நான் படிக்கவில்லை. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 8.00 மணியளவில் கீழ் புவனகிரி அல்லா கோவில் அருகில் நானும், இன்னொருவரும் நின்றிருந்தோம். அப்போது மாட்டுவண்டியை போலிசார் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அதில் 1/2 யூனிட் மணல் இருந்தது. ஆஜர் எதிரியை பிடித்து சம்பவ இடத்தில் விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் என்னிடமும் இன்னொருவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். சம்பவ இடத்தில் வாக்குமூலத்தில் ஒரு கையெழுத்தும், காவல் நிலையத்தில் ஒரு கையெழுத்தும் மணல் ஏற்றி சென்றதற்காக சாட்சி கையொப்பம் போட சொன்னார்கள்.

என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.1** போலிசார் என்னை விசாரிக்கவில்லை. உரிமையாளர் திருப்பப்பட்ட வண்டியினை விற்றுவிட்டார். அதன் புகைப்படம் சி.பி. எண் 114/2018, தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வண்டி தான். அது **சா.பொ.1** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தினை போலிசார் கீழ் புவனகிரி அல்லா கோவிலில் வைத்து எழுதினார்கள். எந்த போலிசார் என்று 8 வருடங்கள் ஆனதால் ஞாபகமில்லை. புவனகிரி போலிசார் தான் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் கையெழுத்து போட்டவர் பெயர் எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்தினை புவனகிரி காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். எதிரியின் அப்பா பெயர் ராஜேந்திரன். கைப்பற்றுதல் மகசரில் மணல் எடுத்து வந்ததற்காக கையெழுத்து வாங்கினார்கள். கைப்பற்றுதல் மகசரில் மணல் கைப்பற்றிதாக உள்ளதா என்றால் எனக்கு படிக்க தெரியாது, எனக்கு தெரியாது. நான் 2 வழக்கிற்கு சாட்சி சொல்ல வந்தேன் என்றால் இல்லை. நான் போலிசாரின் கை ஆள் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு நானும் செல்வரங்கன் என்பவரும் சென்றோம். மணலை மாட்டுவண்டியில் ஏற்றி சென்றார்கள். நான் டிராக்டரில் செங்கல் ஏற்றும் லோடு வேலை செய்கிறேன்.

நான் டிராக்டரில் திருட்டு மணல் அடித்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியாது.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

S C.No. 66/2020

அரசு தரப்பு 2 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வரங்கன் | வயது | : | 45 |
| தந்தை/ கணவர் பெயர் | : | ராமமூர்த்தி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 25.09.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை–**</u> நான் தற்போது தம்பிக்கு நல்லான் பட்டினத்தில் வசித்து வருகிறேன். NMRஆக பொதுப்பணித்துறையில் வேலை செய்து வருகிறேன். 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். என் ஊருக்கு பக்கத்து ஊர்காரர். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 8.00 மணியளவில் புவனகிரிக்கு ஜாமான் வாங்க சென்று கொண்டிருந்தேன். அல்லா கோவில் அருகில் கும்பலாக சிலர் இருந்தார்கள். போலிசார் இருந்தார்களா என்று தெரியாது. நான் என் மகனை அழைத்து சென்றிருந்தேன். மீண்டும் நான் புவனகிரிக்கு சென்றுவிட்டேன். ஒருவர் வந்து என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். வந்து விசாரித்ததற்கு மாட்டு வண்டி பிடித்ததாக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். ஆஜர் எதிரி ரமேஷ் தான் மாட்டு வண்டியுடன் மாட்டிக்கொண்டதாக சொன்னார்கள்.

நான் கையெழுத்து போட்டேன். மாட்டுவண்டியில் மணல் இருந்ததாக சொன்னார்கள். ஆனால் நான் மணலை பார்க்கவில்லை. நான் இரண்டு சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் ஒரு கையெழுத்து மாட்டு வண்டியை பிடித்ததற்கு கேட்டார்கள். மீண்டும் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். இரண்டு கையெழுத்தையும் காவல் நிலையத்தில் தான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

கடந்த 23.07.2018 அன்று காலை 8.00 மணிக்கு கீழ்புவனகிரி மைலாமேடு அருகில் உள்ள பள்ளிவாசல் எதிரில் ஓட்டி வந்த ஒருடயர் மாட்டு வண்டியை நிறுத்தி சோதனை செய்து விசாரிக்க ஆஜர் ரமேஷ் என்பவர் கள்ளத்தனமாக மணல் ஏற்றி வந்ததாக ஒப்புக்கொண்டார் என்றும் எங்கள் முன்னிலையில் சுமார் 1/2 யூனிட் மணலை என் முன்னிலையிலும் முருகன் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்கு சாட்சியாக ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் போட்டதாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

S C.No. 66/2020

அரசு தரப்பு 3 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேந்தன் | வயது | : | 23 |
| தந்தை/ கணவர் பெயர் | : | இளையபெருமாள் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)—ன் விதிமுறைகளின்படி 25.09.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை—**

நான் முள்ளிப்பள்ளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எலக்ரிஷியன் வேலை செய்து வருகிறேன். 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு மதியம் 2.00 மணியளவில் போலிசார் நான் ஆத்துக்கு போனபோது வந்தார்கள். வாய்க்காலுக்கு அருகில் நானும் கோகுலசந்திரனும் இருந்தோம். போலிசார் எங்களிடம் ஒரு சாட்சிகையொப்பம் கேட்டார்கள். போட்டோம். எதற்காக என்று தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். எனது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

கடந்த 23.07.2018 அன்று காலை 10.30 மணிக்கு நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த கோலச்சந்திரன் என்பவரும் கீழ்புவனகிரி வெள்ளாற்று அருகில் நின்று பேசிக்கொண்டிருந்த போது புவனகிரி போலிசார் இவ்வழக்கு சம்பந்தமாக மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்த போது சாட்சிகளாகஇருந்து கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

S C.No. 66/2020

அரசு தரப்பு 4 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோகுலசந்திரன் | வயது | : | 23 |
| தந்தை/ கணவர் பெயர் | : | சங்கர் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)—ன் விதிமுறைகளின்படி 25.09.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை—**

நான் முள்ளிப்பள்ளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எலக்ரிஷியன் வேலை செய்து வருகிறேன். 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. அ.சா.3 யை தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு மதியம் 2.00 மணியளவில் போலிசார் நான் ஆத்துக்கு போனபோது வந்தார்கள். வாய்க்காலுக்கு அருகில் நானும் அ.சா.3 இருந்தோம். போலிசார் எங்களிடம் ஒரு சாட்சிகையொப்பம் கேட்டார்கள். போட்டோம். எதற்காக என்று தெரியாது. அதிலுள்ள விவரங்கள் எனக்குத் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 ஆவது கையெழுத்து என்னுடையது தான். எனது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

கடந்த 23.07.2018 அன்று காலை 10.30 மணிக்கு நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த கோலச்சந்திரன் என்பவரும் கீழ்புவனகிரி வெள்ளாற்று அருகில் நின்று பேசிக்கொண்டிருந்த போது புவனகிரி போலிசார் இவ்வழக்கு சம்பந்தமாக மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்த போது சாட்சிகளாகஇருந்து கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

S C.No. 66/2020

அரசு தரப்பு 5 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | வயது | : | 42 |
| தந்தை/ கணவர் பெயர் | : | சேகர் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 25.09.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் தற்போது அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 23.07.2018 அன்று புவனகிரி காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியில் இருந்த போது காலை 8.00 மணிக்கு நானும் 1018 நிர்மல் குமார் என்பவரும் ரோந்து பணியில் ஆய்வாளருடன் இருந்த போது ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மயிலாமேடு பள்ளிவாசல் அருகில் சென்ற போது மணல் வண்டியை ஆஜர் எதிரி ரமேஷ் ஓட்டிக்கொண்டு வந்தார். அவரை பிடித்து விசாரித்த போது 1/2 யூனிட் அளவுள்ள வெள்ளாற்று மணலை தெரியாமல் எடுத்துவந்ததாக கூறினார். பக்கத்தில் இருந்த சாட்சிகள் முருகன், செல்வரங்கன் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினோம்.

அவர் செய்த குற்றத்தினை ஒப்புக்கொண்டார். 8.05 மணிக்கு ஆஜர் எதிரியை ஆய்வாளர் கைது செய்து மகசரில் கைப்பற்றுதவற்காக மாட்டு வண்டியையும், மணலையும் 9.10 மணியளவில் மகசரில் கைப்பற்றினார். என்னுடன் 1018 நிர்மல்குமார் இருந்தார். 10.00 மணிக்கு டயர்வண்டி, மணல், எதிரி சகிதம் நிலையம் வந்து விசாரித்து எதிரி மீது ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நான் உதவியாகஇருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

எங்களுடன் ரோந்து பணிக்கு ஆய்வாளரும் வந்தார். சம்பவ இடத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து வாங்கினார்கள். மகசரில் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேன். மகசரை படித்து பார்த்தேன். அதில் 1/2 யூனிட் மணலை மாட்டு வண்டியில் ஏற்றிவந்ததாக எழுதியுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் என்னுடைய கையெழுத்து இல்லை. மகசரில் மாட்டுவண்டியை கைப்பற்றியதாக இல்லை. அன்றைய தினம் நாங்கள் ஒரு வண்டியை தான் பிடித்தோம். புள்ளி விவர கணக்கிற்காக எங்கள் ஆய்வாளர் போட்ட வழக்கிற்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும், நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்பதும் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

S C.No. 66/2020

அரசு தரப்பு 6 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நிர்மல் குமார் | வயது | : | |
| தந்தை/ கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 25.09.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை–</u>** நான் தற்போது மருதூர் காவல் நிலையத்தில் முதல் நிலை தனிப்பிரிவு காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 23.07.2018 அன்று புவனகிரி காவல் நிலையத்தில் 2ஆம் நிலைக்காவலராக பணியில் இருந்த போது ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக நானும், என்னுடன் மணிகண்டன் 1045 முதல் நிலை காவலரும் காலை 8.00 மணிக்கு ரோந்து பணியில் ஆய்வாளருடன் இருந்த போது ஆய்வாளருக்கு மணல் கடத்துவதா கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மயிலாமேடு பள்ளிவாசல் அருகில் சென்ற போது மாட்டுவண்டியில் ஆற்று மணலை கள்ளத்தனமாக கடத்தி வந்தவரை ஆய்வாளர் விசாரித்த போது ரமேஷ், ஓட்டிக்கொண்டு வந்தவரை மடக்கி பிடித்தோம். அவரை பிடித்து விசாரித்த போது 1/2 யூனிட் அளவுள்ள ஆற்று மணலை தெரியாமல் எடுத்துவந்ததாக கூறினார்.

எதிரியை ஆய்வாளர் 8.00 மணிக்கு கைது செய்தார். எதிரியானவரை எந்த வித அச்சுறுத்தலுமின்றி சாட்சிகள் முருகன், செல்வரங்கன் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். அவர் செய்த குற்றத்தினை ஒப்புக்கொண்டார். 8.05 மணிக்கு ஆஜர் எதிரியை ஆய்வாளர் கைது செய்து மகசரில் கைப்பற்றுதவற்காக மாட்டு வண்டியையும், மணலையும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 9.15 மணியளவில் மகசரில் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மாட்டு வண்டி தான் கைப்பற்றப்பட்டதா என்றால் சரியாக ஞாபகமில்லை. 10.00 மணிக்கு டயர்வண்டி, மணல், எதிரி சகிதம் நிலையம் வந்து விசாரித்து எதிரி மீது ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நான் உதவியாகஇருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் அன்றைய தினம் ஒரு வண்டி தான் கைப்பற்றினோம். நான் கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து செய்யவில்லை. மணிகண்டன் கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து செய்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. முருகன் பள்ளி வாசல் அருகில் வைத்து தான் கையெழுத்து போட்டார். மகசரில் மாட்டுவண்டியை கைப்பற்றிது பற்றி எழுதினாரா என்றால் எழுதியிருந்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் மகசரில் மாட்டுவண்டி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புள்ளி விவர கணக்கிற்காக எங்கள் ஆய்வாளர் போட்ட வழக்கிற்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும், நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்பதும் சரியல்ல.